தமிழ்நாடு வனத்துறை

அனுப்புநர்
திரு. ச. கௌதம், இ.வ.ப.,
மாவட்ட வன அலுவலர்,
தேனி வனக்கோட்டம்,
தேனி — 625 531.

பெறுநர்
உதவி கோட்ட பொறியாளர்,
நெடுஞ்சாலை,
கட்டுமானம் (ம) பராமரிப்பு உட்கோட்டம்,
தேனி.

ந.க.எண்: 7304/2019/வ நாள்: 5.07.2019.

அய்யா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை — தேனி(நெ) க (ம) ப உட்கோட்டம் கட்டுப்பாட்டில் உள்ள புறவழிச்சாலை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணி நடைபெற அனுமதி வழங்குவது - தொடர்பாக

பார்வை :
1. நெடுஞ்சாலைத்துறை பிரேரணை நாள். 30.07.2013
2. நெடுஞ்சாலைத்துறை திருத்திய பிரேரணை Lr.No. 25/2813/JDO 2 நாள். 07/08/2013
3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண். TS1/34967/2013 நாள்.27/08/2013
4. இவ்வலுவலக அனுமதி கடிதம் ந.க.எண். 7304/2013/வ நாள். 30.08.2013
5. உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, தேனி. ந.க.எண். 16/2019/அ1 நாள். 16.05.2019

-----

மேற்காண் பொருள் தொடர்பாக பெரியகுளம் - குமுளி மற்றும் தேனி — மதுரை ஆகிய இரு பிரதான சாலையை இணைக்கும் தேனி புறவழிச்சாலையை மேம்படுத்தும் பொருட்டு 4.29.5 ஹெக்டேர் (i.e) 1. Ch:- 1+553 முதல் 1+833 = 278 மீட்டர், 2. Ch:- 2+243 முதல் 3+398 = 950 மீட்டர் மற்றும் 3. Ch:- 3+738 முதல் 4+400 = 662 மீட்டர் ஆக மொத்தம் 1890 மீட்டர் நீளம் மற்றும் அகலம் (22+23.44)/2, மொத்த பரப்பு 4.29.5 ஹெக்டேர், வனநிலம் கோரிய பிரேரணை தேனி நெடுஞ்சாலைத்துறையால் பார்வை 1-ல் காணும் கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பிரேரணை வனப்பாதுகாப்புச்சட்டம் 1980 (Forest Conservation Act 1980) -ன் படி Form A part –Bஐ பூர்த்தி செய்து Online -ல் விண்ணப்பிக்கபடவில்லை.

மேலும் அதற்கான வனமில்லா ஈட்டுநிலம், தேனி மாவட்டம் மற்றும் தேனி வட்டம் எண். 21 வீரபாண்டி கிராமம், (பெருமாள் கோவில் கரடு) புல எண். 1511/1-ல் 8.59.0 ஹெக்டேர் நிலம் வனத்துறைக்கு வழங்கப்பட்டு தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவு 4-ன்கீழ் ஒதுக்கு நிலமாக அறிவிக்கை செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் பார்வை 2-ல் தேனி நெடுஞ்சாலைத்துறையால் திருத்திய பிரேரணை மேற்கண்ட புறவழிச்சாலையை மேம்படுத்த 0.79.44 ஹெக்டேர் (i.e) Ch:- 3+738 முதல் 4+400 நீளம் = 662மீட்டர் மற்றும் 12 மீட்டர் மட்டும் கோரிய நெடுஞ்சாலைத்துறையால் சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் தேனி நெடுஞ்சாலைத்துறைக்கு மேற்காணும்

புறவழிச்சாலையை மேம்படுத்த 0.79.44 ஹெக்டேர் (i.e) Ch:- 3+738 முதல் 4+400 நீளம் = 662 மீட்டர் மற்றும் 12 மீட்டர் மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

எனவே, பார்வை 5-ல் காணும் உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, புறவழிச்சாலை மேம்படுத்த அனுமதி கோரிய வனநிலம் (Ch:- 1+553 முதல் 1+833 = 278 மீட்டர் மற்றும் Ch:- 2+243 முதல் 3+398 = 950 மீட்டர்) வனப்பாதுகாப்புச்சட்டம் 1980 (Forest Consrvation Act 1980)-ன் படி Form A Part-1-ஐ பூர்த்தி செய்து Online-ல் www.parvesh.nic.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு உதவி கோட்டப்பொறியாளர், அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் அன்புள்ள,
ஒம்/-சு.கௌதம்,
மாவட்ட வன அலுவலர்.
தேனி வனக்கோட்டம், தேனி.

/உ.ந.உ.ப/

வரைதொழில் அலுவலர்
5.7.19
05/07/2019